ISSN : 2456-821X
அவையம் 3(1) 2019 ப.எண். 12-19

===========================================================

# திருப்பத்தூர் வட்டாரக் கல்வெட்டுகளில் பழந்தமிழ் அளவைச் சொற்கள்

**முனைவர் ஆ. பிரபு**
*உதவிப்பேராசிரியர்*
*தமிழ் முதுகலை & ஆய்வுத் துறை*
*தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)*
*திருப்பத்தூர்.*

**கட்டுரை பெறப்பட்டது : 24.04.2019** **ஏற்கப்பட்டது : 14.06.2019**

===========================================================

இன்றைய அறிவியல் கற்பிக்கும் எண்ணற்ற விந்தைகளைத் தம் அன்றாட வாழ்வியல் சூழலில் எதார்த்தமாகக் கண்டறிந்து செயல்படுத்தியவர்கள் நம் தமிழ்க்குடியினைச் சார்ந்த முன்னோர்களாவர். எழுத்துக்கள் தொடங்கி வானியல் நுட்பங்கள் வரையிலான அனைத்துப் புத்தாக்க முயற்சிகளும் தமிழர் வரலாற்றினுள் அடங்குவனவாகும். அவ்வகையில் அளவை (Measurement)சார்ந்த நுட்பங்களை அறிந்து, தனித்தனிப் பிரிவுகளுக்கேற்ப எண்ணற்ற சொற்களை வகுத்து வைத்திருந்தனர். இச்சொற்களில் பலவற்றை இன்றைக்கும் மக்களது பேச்சு வழக்கத்தில் காணமுடிகின்றது. சில சொற்கள் புழக்கத்தில் இல்லாமலும் அழிவுற்றன. வேலூர் மாவட்டம் திருப்பத்தூர்

வட்டாரத்தில் நான் மேற்கொண்ட கள ஆய்வில் மூன்று ஊர்களில் கண்டறியப்பட்ட கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ள அளவைச் சொற்களை இக்கட்டுரை விவரிக்கின்றது.

**கட்டேரி**

சோலையார்பேட்டை ஊராட்சிக்கு உட்பட்ட அம்மையப்பன் நகர் வாலாட்டியூர் வட்டத்தில் விவசாய நிலத்தினில் புதைந்த நிலையில் இக்கல்வெட்டு அடையாளம் காணப்பட்டது. நிலத்தின் உரிமையாளர் விடுத்த அழைப்பின் பேரில் அங்கு சென்று ஆய்வு செய்யப்பட்டது. 2 ½ அடி சுற்றளவில் முக்கோண வடிவத்தில் கல்வெட்டு அமைந்துள்ளது. இக்கல்வெட்டு நிலக்கொடை குறித்ததாக இருப்பதற்கு வாய்ப்புள்ளது.





கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்கள் கி.பி.18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாக உள்ளன. கல்லின் மேற்புறமும் பக்கவாட்டிலும் காணப்படும் கல்வெட்டு வாசகங்கள் பின்வருமாறு,

"சந்திரனும்

சூரியனும்

சாஷி"

"செம்மங்குட்ட

*சின்ன எல்ல*

*கட்டு மங்கயம்*

*கள (ழ)னிக்குள்''*

*''ரு(5) மோடு லெக்கு...*

*.. அம்மைய.....ஊரு...*

*..........................''*

*இக்கல்வெட்டில் மூன்று இடப்பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. 1.செம்மங்குட்டை 2. கட்டுமங்கய(ள)ம் 3. அம்மைய ....ஊரு. இவற்றில் 'கட்டுமங்கயம்' என்பது 'கட்டுமங்களம்' என்று வழங்கியிருக்கக்கூடும். இப்பெயர் மருவி 'கட்டேரி' என மாறியிருப்பதற்கும் வாய்ப்புகள் உள்ளன. 'அம்மைய... ஊரு' என்பது இன்றைக்கு அம்மையப்பன் நகர் என அழைக்கப்படும் இப்பகுதியைச் சேர்ந்த ஊராக இருக்கலாம்.*

*'ரு' (5) என்பது தமிழ் எண் ஐந்தைக் குறிக்கின்றது. மோடு மேடு, முகடு என்ற பொருளில் அமைகின்றது. நிலத்தில் புதைந்துள்ளதால் கூடுதல் தரவுகள் சேகரிக்க இயலவில்லை.*

**தாமலேரிமுத்தூர்**

*திருப்பத்தூரை அடுத்த ஜோலார்பேட்டை அருகிலுள்ள தாமலேரிமுத்தூர் கிராம ஏரிக்கரையில் தொன்மையான கொற்றவை சிற்பம் பொறித்த கல்வெட்டு அப்பகுதியில் மேற்கொண்ட கள ஆய்வில் கண்டறியப்பட்டது. இச்சிற்பமானது துர்க்கையம்மன் என்றும் மழைத்தெய்வம் என்றும் இவ்வட்டார மக்களால் அழைக்கப்படுகின்றது. கொற்றவை எட்டுக் கரங்களுடன் புடைப்புச் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது.*

*பழமையான கொற்றவை சிலை முன்பக்கமும் அதன் பின்பக்கம் பழமையான தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட சுமார் 6அடி உயரமுள்ள கல்வெட்டாக இது அமைந்துள்ளது.*

பதிப்பு வலையம்

 

இக்கல்லானது சில வருடங்களுக்கு முன்புவரை ஏரியின் நடுப்பகுதியில் இருந்தது. தற்போது ஏரியின் தென்கிழக்கு ஓரத்தில் வைக்கப்பட்டுள்ளது. நிலப்பரப்பிற்குக் கீழே சுமார் 3அடி ஆழத்தில் கல் நடப்பட்டுள்ளது. கல்லின் பின்புறம் முழுவதும் எழுத்துக்கள் எழுதப்பட்டுள்ளன.

நிலக்கொடை மற்றும் பொன்கொடை குறித்த செய்தியைத் தாங்கியதாக இக்கல்வெட்டு அமைகின்றது. நிலம் மற்றும் பொன் கொடையாக அளிக்கப்பட்ட செய்தியினை இக்கல்வெட்டு விவரிக்கின்றது.

"ஸ்ரீ கௌரி மங்கள

த்து... எட்டாவது

... .... ....... எழுத்து

கழஞ்சு பொன்னும்

முப்பதின்கண் ....

பக்கமும் பட்ட ......

.......................................

......................................."

என்று கல்வெட்டில் எழுதப்பட்டுள்ளது. தொடர்ந்து எழுத்துக்கள் வாசிக்க இயலாவண்ணம் பூமிக்கு அடியில் கல்லுடன் எழுத்துக்கள் மறைந்துள்ளன.

கல்வெட்டில் 4வது வரியின் தொடக்கம் 'கழஞ்சு' என்பதாகவும், 5வது வரியின் தொடக்கம் 'முப்பது' என்பதாகவும் இடம்பெற்றுள்ளது. கழஞ்சு என்பது தங்கத்தை அளவிடும் முறையாகும். 'மு' , 'மு' ஆகிய இரண்டு எழுத்துக்களும் ஒன்றைப்போலவே எழுதப்பட்டு வந்தாலும் வேறுபாடு தோன்ற 'மு' என்னும் எழுத்தின் நடுக்கோடு நீளமாக எழுதப்படுவது பல்லவ அரசரான நிருபதுங்கவர்மனுடைய லால்குடி கல்வெட்டில் பின்பற்றப்பட்ட முறையாகும். இவ்வெழுத்து முறை கி.பி 9ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியைச் சேர்ந்ததாகும். எனவே இக்கல்வெட்டின் காலம் கி.பி.9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கொள்ளலாம்.

இக்கல்வெட்டில் இடம்பெறும் 'மங்களத்து' என்னும் சொல்லில் மெய்யெழுத்துக்கள் 'ங்' 'த்' புள்ளி பெற்றுள்ளன. கல்வெட்டின் இரண்டாவது அடியில் இடம்பெறும் 'எ'கரக் குறில் புள்ளி பெற்றுள்ளது. அரிதான சில தமிழ் பிராமிக் கல்வெட்டுகளிலும், பழமையான வட்டெழுத்துக் கல்வெட்டுகளிலுமே எழுத்துக்கள் புள்ளி பெற்றுள்ளன. பெரும்பாலும் கல்வெட்டுகளில் எழுத்துக்கள் புள்ளி பெறுவதில்லை. அவ்வகையில் புள்ளியுடன் கூடிய இக்கல்வெட்டு கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும். தமிழகத்தின் வட பகுதியில் ஏற்பட்ட வரிவடிவ மாற்றங்களை அறிவதற்கு புள்ளியுடன் கூடிய இக்கல்வெட்டு தக்க சான்றாக அமைகின்றது. கல்வெட்டுகளில் எழுதப்பட்ட செய்திகள் பெரும்பாலும் செப்புப் பட்டயங்களிலும் எழுதி வைப்பது வழக்கம். எனவே இக்கல்வெட்டுக்கான செப்புப் பட்டயம் இவ்வட்டாரத்தில் இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் உண்டு.

பதிப்புரிமை உரிமைப்படி

**திருப்பத்தூர்**

திருப்பத்தூர் ஏரிக்கரை வழியாக மடவாளம் செல்லும் வழியில் தென்புறம் உள்ள நிலத்தில் மண்ணில் புதையுண்ட நிலையில் ஒரு தூண் கல் இருப்பது கண்டறியப்பட்டது. இது கி.பி.17ஆம் நூற்றாண்டில் திருப்பத்தூரை உள்ளடக்கிய பகுதிகளை ஆட்சி செய்த விஜயநகர அரசின் வழிவந்த ‘ஜெகதேவிராயர்’ திருப்பதி வெங்கடாஜலபதிக்கு 100குழி நிலம் கொடையாக அளிக்கப்பட்டதை அறிவிக்கும் கல்வெட்டாகும்.

இம்மன்னர் தமிழ்நாட்டின் தருமபுரி, கிருஷ்ணகிரி, ஜெகதேவி ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பாராமகாலில் 12 கோட்டைகள் கட்டி நான்கைந்து தலைமுறையாக (கி.பி.1578 முதல் 1669 வரை) 91 ஆண்டுகள் இப்பகுதியை ஆட்சி செய்த மரபினர் ஆவார். **‘பாராமகால்’ என்பது கிருஷ்ணகிரி, தருமபுரி, ஊத்தங்கரை, திருப்பத்தூர்** ஆகிய பகுதிகளோடு கந்திகுத்தி சமீந்தாரின் பகுதியையும் உள்ளடக்கிய நிலப்பரப்பைக் குறிக்கும். இம்மரபின் இறுதி அரசன் கி.பி. 1669இல் பீஜப்பூர் சுல்தானின் தளபதியான முஸ்தபா கானுடன் போரிட்டு மாண்டான், இத்துடன் இம்மரபு அழிந்தது.

 

இக்கல்வெட்டானது நிலத்திற்கு மேலாக 4.1/2 அடி உயரம் கொண்டதாக உள்ளது. நான்கு புறங்களை உடைய தூண் கல்லாக இதனைச் செதுக்கியுள்ளனர். ஒரு புறம் தவிர்த்த ஏனைய மூன்று புறங்களிலும் கல்வெட்டு வாசகங்கள் காணப்படுகின்றன. இதில் தமிழும்

*கிரந்தமும் கலந்து எழுதப்பட்டுள்ளது. வாசகங்களில் உள்ள சொற்களில் சில இடங்களில் எழுத்துப் பிழைகளும் உள்ளன. மாவுப்பூச்சின் வழியாகக் கல்வெட்டுப் படியெடுக்கப்பட்டு வாசிக்கப்பட்டது.*

*பக்கம்:1இல் வைணவ முத்திரையும் மங்களச் சொற்களும் சிறப்பாகச் செதுக்கப்பட்டுள்ளது.*

***"ஸ்ரீ வேங்கடேசுவர***

***ராஜ ஸ்ரீ***

***தேவ திரு வே***

***ங்கட ராயர்"***

*பக்கம்: 2 இல் கொடைச் செய்தியும் நில அளவும் குறிப்பிடப்பட்டுள்ளது.*

***"ராஜ்ஜியம் பண்ணி அருளாநின்ற***

***காலத்தில் ஆனந்த வருடம்***

***ஆசாட தயதி காலத்திலே***

***ஜெகதேவிராய காரிய***

***கர்த்தரான சூரசால ராயன்***

***தறு(ரு)மம் அல்லி(ள்ளி)தனை குழி ள (100)***

***வேங்கடீஸ்வரனுக்கு சமல்(ர்)பித்தேன்"***

*பக்கம்: 3 இல் காப்புச் செய்தி, அதாவது இக்கல்வெட்டினைச் சேதப்படுத்துவோருக்கு என்ன தண்டனை என்று விவரிக்கப்பட்டுள்ளது.*

***"திருப்பதி வெ***

***ங்கடேசுவர சு***

***வாமிக்கு விட்ட***

***து இதுக்கு ஒரு***

அகழ்வைப்பகம் பதிப்பு

***த்தன் விஷமம்***

***பண்ணினவன் கங்***

***கை கரையிலே***

***--------- பசுவைக் கொன்ற***

**தோஷத்திலே போவான்"**

*இவ்வாறாகக் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டானது 17ஆம் நூற்றாண்டில் ஜெகதேவிராயர் எனும் மன்னனின் கட்டளைப்படி சூரசால ராயன் என்பவன் இக்கல்வெட்டினை வடித்துள்ளான் என்பதைப் பறைசாற்றுகின்றது. இதனை மேனாள் தொல்லியல் துறை உதவி இயக்குநர் முனைவர் ர.பூங்குன்றன் உறுதிசெய்தார்.*

***முடிவுரை***

*கல்வெட்டுகள் மனித வரலாற்றினை அறிந்திட உதவும் நம்பகமான உறுதியான சான்றாவணங்களாகும். எளிதில் அழிவுறாமல் காலங்கள் கடந்து செய்திகளைப் பறைசாற்றுவனவாகும். அவ்வகையில் கட்டேரி, தாமலேரிமுத்தூர், திருப்பத்தூர் ஆகிய இடங்களில் கிடைக்கப்பட்ட கல்வெட்டுகளில் குழி, கழனி, மோடு, கழஞ்சு போன்ற அளவைச் சொற்கள் இடம்பெறுவதை அறியமுடிகின்றது. இச்சொற்கள் யாவும் நிலங்களை அளக்கப் பயன்படுத்தும் அளவைச் சொற்களாகும்.*

பதிப்பு இதழ்